## ஸ்ரீ லங்கன் கேட்டரிங் லிமிட்டட் - 2018/2019

-----------------------------------------------------------------

### 1.1 அபிப்பிராயம்

ஸ்ரீ லங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் (''கம்பனி'') 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்று எனக்கு உதவியது.

கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டிடமிருந்து ("தாய்க்கம்பனி") பெறவேண்டிய ரூபா 7,627 மில்லியன் தொகை கம்பனியின் மொத்தச் சொத்துக்களில் 61 சதவீதமாக காணப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் போது மேற்படி நீண்டகால நிலுவை மீதி காணப்பட்ட போதிலும் கம்பனி ரூபா 3,280 மில்லியன் தொகையான பங்கிலாபத்தை பிரேரித்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டிற்கு செலுத்தியிருந்தது. | எஸ்எல்ஏ ஆல் பெறவேண்டியவைகளின் தீர்ப்பனவு எமது கேள்வி தொடர்பில் காணப்படுகின்றது. இது மிகவும் உண்மையாக தேவைப்படும் போது மாத்திரம் எஸ்எல்ஏ இடமிருந்து நிதிகளை நாங்கள் கோருகின்றோம். அத்துடன் எஸ்எல்ஏ இற்கான பங்கிலாபக் கொடுப்பனவு சபையின் அங்கீகாரத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கடன்பட்டோர் மீதிகளை தீர்ப்பனவு செய்வதன் மூலம் எஸ்எல்ஏ இடமிருந்து பெறப்பட்ட காசிலிருந்து எஸ்எல்சீ ஆல் பங்கிலாபக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. | ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டிடமிருந்து பெறவேண்டியவற்றை உரிய காலங்களில் அறவீடு செய்வதற்கான நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) நல்லாளுகைக்கான பொது முயற்சி வழிகாட்டல்கள் தொடர்பான 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை | | | |
| (i) 9.2(ஈ) பந்தி | கம்பனியின் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு | சபையால் முறையாக அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு வரைபடம் மற்றும் பதவியணியினர் பொதுத் திறைசேரியின் பொது | அமைப்பு வரைபடம் மற்றும் பதவியணியினரிற்கான அங்கீகாரம் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்யப்பட்டிருக்கவில்லை. | முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | வேண்டும். |
| (ii) | 9.3.1(i) ஆம் பந்தி | கம்பனியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டம் (எஸ்ஓஆர்) பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் உரிய அமைச்சால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தை நாங்கள் கொண்டுள்ளோம். | கம்பனியின் எஸ்ஓஆர் இற்காக பொதுத் திறைசேரியின் இணக்கப்பாடு மற்றும் உரிய அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

(அ) கம்பனி ரூபா 5,602 மில்லியன் தேறியலாபத்தை விளைவித்திருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 3,890 மில்லியனாக காணப்பட்டதனால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,712 மில்லியன் அதிகரிப்பை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டிற்கான வருமான நடவடிக்கைககள் தொடர்பில் விமான சமையலறை வருமானம் ரூபா 1,070 மில்லியனால் அதிகரித்தமை இவ் அதிகரிப்பிற்கான பிரதான காரணமாகும்.

(ஆ) 2014/15 ஆம் ஆண்டு தொடக்கம் 2018/19 ஆம் ஆண்டுவரை கம்பனியின் பெறுமதிச் சேர்க்கை அதிகரித்திருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விபரம்** | **2018/19** | **2017/18** | **2016/17** | **2015/16** | **2014/15** |
|---|---|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| வரிக்கு முன்னரான இலாபம் (பங்கிலாப கொடுப்பனவின் முன்னர்) | 5602.50 | 3890.30 | 3736.39 | 3637.86 | 2192.12 |
| **சேர்த்தல் :-** | | | | | |
| ஊழியர் சம்பளம் | 1128.26 | 1019.78 | 890.15 | 788.02 | 704.79 |
| **அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் (நேரில்)** | | | | | |
| முன்னுரிமைப் பங்குகள் | 130.10 | 130.10 | 130.10 | 196.78 | 300.00 |
| சாதாரண பங்குகள் | 3280.18 | 5314.10 | 3093.48 | 2100.00 | 2100.00 |
| **அரசாங்கதிற்கு செலுத்தப்பட்ட வரி** | | | | | |
| என்பீரீ | 0.55 | 0.16 | 0.58 | 0.47 | 0.21 |
| வற் | 13.55 | 11.42 | 13.13 | 4.03 | 5.59 |
| ஏனைய தீர்வைகள் - | 48.79 | 41.99 | 34.73 | 15.01 | 14.26 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஈஎஸ்சீ பெறுமானத்தேய்வு | 207.61 | 188.02 | 282.51 | 303.81 | 278.13 |
| | ------------ | ----------- | ---------- | ---------- | ----------- |
| **மொத்தம்** | **10,411.54** | **10,595.88** | **8,181.09** | **7,045.97** | **5,595.10** |
| | ======= | ======= | ====== | ====== | ====== |

இலாபம் அதிகரித்தமை மற்றும் சாதாரண பங்குகள் மீதான பங்குலாபம் காரணமாக முன்னைய ஆண்டு வரை கம்பனியின் பெறுமதிச்சேர்க்கை பிரதானமாக படிப்படியாக அதிகரித்திருந்த போதிலும் ரூபா 1.8 மில்லியன் தொகையால் வரிக்கு பின்னரான இலாபம் அதிகரித்தன் மூலம் சாதாரண பங்கிலாபத்தை குறைவாக பிரேரித்தமை காரணமாக மீளாய்வாண்டின் போது இது குறைவடைந்திருந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

ஐந்து ஆண்டுகளிற்கான மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிலைமை தொடர்பான முக்கியமான விகிதங்கள் பின்வருமாறுள்ளன.

| **விபரம்** | **2018/19** | **2017/18** | **2016/17** | **2015/16** | **2014/15** |
|---|---|---|---|---|---|
| நடைமுறைப் பொறுப்புக்களிற்கான நடைமுறைச் சொத்துக்கள் (தடவைகளின் எண்ணிக்கை) | 7.82 | 6.44 | 8.76 | 9.74 | 9.50 |
| விரைவு விகிதம் | 7.55 | 6.14 | 8.46 | 9.43 | 9.03 |
| கடன் உரிமை மூலதன விகிதம் | 0.21 | 0.26 | 0.19 | 0.32 | 0.55 |
| ஈபிஎஸ் - பங்கொன்றிற்கான உழைப்பு | 5.96 | 4.14 | 3.97 | 3.87 | 2.33 |
| பங்கொன்றிற்கான பங்குலாபம் | 4.47 | 3.10 | 2.27 | 3.38 | 3.29 |
| மொத்த எல்லை | 79% | 77% | 77% | 77% | 76% |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் | 58% | 58% | 46% | 49% | 37% |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறவேண்டியவைகள் மற்றும் குறுங்கால முதலீடுகள் நூறு சதவீதத்தால் அதிகரித்தமை காரணமாக நடைமுறைப் பொறுப்புகளிற்கான நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் மற்றும் விரைவு விகிதங்கள் என்பன பிரதானமாக மீளாய்வாண்டில் அதிகரித்திருந்தன.

(ஆ) வரிக்குப் பின்னரான இலாபம் அதிகரித்தமை காரணமாக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் பங்கொங்கிற்கான உழைப்பு முறையே ரூபா 1.82 மற்றும் ரூபா 0.17 ஆல் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

விமான சமயலறைகளை பராமரித்தல் மற்றும் செயற்படுத்துதல், விமானப் பிரயாணிகளால் வேண்டப்பட்டவாறு உணவுகள், பானங்கள் மற்றும் அத்தகைய ஏனைய உணவுப்பொருட்களை வழங்குதல் தொடர்பான வணிகத்தை மேற்கொள்ளுதல், விமானங்களிற்காக பிரயாணிகள் காத்திருக்கும் இடங்களை (passengers lounges) செயற்படுத்துதல், பண்டகசாலைகள், இணைந்த களஞ்சியங்கள் போன்றவற்றை பெற்று வழங்குதல் மற்றும் சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவகங்கள் போன்றவற்றின் உரிமையாளர்களாக வணிகத்தை மேற்கொள்ளுதல் என்பன கம்பனியின் நோக்கங்களாக உள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளிற்கான கம்பனியின் ஒவ்வொரு உற்பத்திப் பிரிவினதும் விற்பனை வருமானம் மற்றும் இலாபம் / (நட்டம்) பின்வருமாறு உள்ளன.

| வருமான மூலம் | 2018/19 மொத்த வருமானம் | 2018/19 ஆண்டிற்கான இலாபம்/ (நட்டம்) | 2017/18 மொத்த வருமானம் | 2017/18 ஆண்டிற்கான இலாபம்/ (நட்டம்) | 2016/17 மொத்த வருமானம் | 2016/17 ஆண்டிற்கான இலாபம்/ (நட்டம்) |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| விமான சமையலறை | 7,825.30 | 4,799.99 | 6,754.96 | 3,140.60 | 5,526.50 | 3,053.39 |
| பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் | 1,266.32 | 545.76 | 1,210.34 | 544.01 | 1,104.49 | 479.31 |
| வனிலா பொட் | 31.88 | 6.96 | 25.17 | 5.86 | 22.23 | 5.35 |
| செமொண்டு உணவகம் | 38.60 | (6.05) | 90.81 | (5.72) | 78.36 | 4.09 |
| ட்ரான்சிற் ஹோட்டல் | 174.58 | 67.80 | 149.45 | 50.42 | 113.69 | 36.25 |
| எமிரேட்ஸ் லோன்ஞ் | 140.23 | 73.56 | 133.53 | 67.39 | 143.39 | 72.62 |
| மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைய (எம்ஆர்ஐஏ) உணவகம் | 12.8 | (15.47) | 9.45 | (21.32) | 28.84 | (10.14) |
| லோன்றி | 259.95 | 129.96 | 223.81 | 109.06 | 198.63 | 95.51 |
| **மொத்தம்** | **9,749.66** | **5,602.51** | **8,597.52** | **3,890.30** | **7,216.13** | **3,736.39** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செமண்டு உணவகத்திலிருந்தான வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 90.81 மில்லியனிலிருந்து ரூபா 38.60 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது.

(ii) மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலைய (எம்ஆர்ஐஏ) உணவகம் ஆரம்பத்திலிருந்து நட்டமடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது தொடர்பாக ரூபா 15.47 மில்லியன் தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 200 எண்ணிக்கையான மொத்த பெறுகை நடவடிக்கைகளில் ஏறத்தாழ 55 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 109 எண்ணிக்கையான மூலதன பெறுகை நடவடிக்கைகளை கம்பனி அமுல்ப்படுத்தியிருக்கவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் பின்பற்றப்பட வேண்டிய நீண்ட பெறுகை செயன்முறை காரணமாக குறித்த சில செயற்திட்டங்கள் தாமதமாகியிருந்தன. | பெறுகைத் திட்டம் உண்மையானதாகவும் அடையக்கூடியதாகவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 ஒக்தோபர் 11 ஆம் திகதிய பெறுகை கைநூலின் 2.7.5 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களப் பெறுகைக் குழுவிற்காக பெறுகை நிறுவனத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தரொருவர் உறுப்பினரல்லாத செயலாளராக காணப்பட வேண்டிய போதிலும் கம்பனிக்கான திணைக்கள பெறுகைக் குழுவின் செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | காலப்பகுதி முழுவதும் திணைக்களப் பெறுகைக் குழுவிற்காக உறுப்பினரல்லாத செயலாளராக பெறுகை மற்றும் கப்பற்துறை முகாமையாளர் செயற்பட்டிருந்தார். பெறுகைக் கைநூலின் 2.7.5 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்காத போதிலும் நிறுவன பெறுகைக் குழுவின் (ஈபிசீ) செயலாளரின் நியமனத்திற்காக பீசீ இடமிருந்து தேவையான அங்கீகாரம் பெறப்படும். | நிறுவன பெறுகைக் குழுவின் செயலாளர் நியமனம் செய்யப்பட வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 24 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. பதவியணியினர் தனித்தனியான சேவை வகைப்படுத்தல்களின்றி மொத்தமாக சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததன் காரணமாக ஊழியர் வெற்றிடங்களின் வகைப்படுத்தல்கள் இனங்காணப்பட முடியாதிருந்தன. | பிரிவுகள்/ பதவியணி தரங்கள்/ நிறைவேற்றுநர்களை அடிப்படையாகக் கொண்டு சபையால் கம்பனி பதவியணி அங்கீகரிக்கப்படுகின்றது. நாங்கள் ஒவ்வொரு வகைப்படுத்தலிற்குமான விபரமான தர ரீதியான பிரித்தெடுப்புக்களை கொண்டுள்ளோம். வெற்றிடங்கள் தொடர்பாக நிறுவனத்தின் வினைத்திறன் மட்டங்களை அடைவதை முன்னேற்றுவதற்கு | பதவியணியினர் முழுமையாக அங்கீகரிக்கப்படுவதற்கு பதிலாக தனித்தனியாக சேவை வகைப்படுத்தல்களை இனங்காண்பதன் மூலம் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செயற்திறன் தேவைப்படுகின்றதெனும் அடிப்படையில் முகாமைத்துவம் காணப்படுகின்றது. ஆகையால் செயற்பாட்டு மட்டத்தில் தங்கி தொடர்ந்து செல்லும் அடிப்படையில் பதவியணியை குறைப்பதற்கு தொடர்ச்சியான முயற்சி காணப்படுகின்றது. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட் அறிந்திருக்காததன் காரணமாக அதன் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பான இலக்குக் கட்டங்கள் மற்றும் அத்தகைய இலக்குகளை அடைந்துகொள்வதை மதிப்பீடு செய்வதற்கான சுட்டிகள் எனபவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்தகைய அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக எங்களிற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காண்பதற்கும் அத்தகைய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |